திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, வனஸ்பதி தயாரிப்பதற்கு கடலை எண்ணெய் உபயோகப்படுகிறது. நாட்டிலே வனஸ்பதி மிக அதிகமாக உபயோகப்படுகிற காரணத்தால் எண்ணெய் ஆலையைத் தொடங்குவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட உத்தேசம் இப்போது இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, காட்பாடியிலே ஒரு எண்ணெய் ஆலை ஆரம்பிப்பதற்காக 10 லட்சம் ரூபாய் கடன் கொடுக்கப்பட்டும், பத்து ஆண்டுகளாகியும் இன்னும் நடைபெறுமல் இருக்கிறது. கொடுத்த கடன் திருப்பி வாங்கப் பட்டதா இல்லையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மேலூர் பற்றியது மூலக்கேள்வி. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

திரு. எம். சண்முகம் : தென் ஆர்க்காடு மாவட்டத்தில் வனஸ்பதி தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு பத்து ஆண்டுகளுக்கு மேலாகியும் துவக்கப்படவில்லை. தனியார் துறையிலே ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது. அரசாங்கமே அதற்கு 15 இலட்சம் கடன் கொடுத்தும் வசூல் ஆகாமல் இருக்கிறது. ஆகையால், அரசாங்கம் அந்தத் தொழிற்சாலையை ஏற்று நடத்துவதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால், விவரம் அறிந்து பதிலளிக்கலாம்.

திருச்செந்தூர் வட்டத்தில் காகித உற்பத்தி ஆலை

* 339 வினா.—திரு. டி. மார்டின் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) நெல்லை மாவட்டத்தில் திருச்செந்தூர் தாலுக்காவி லுள்ள சாத்தான்குளத்திலும், பரமன்குறிச்சியிலும் பேப்பர் தொழிற்சாலை மாநில சர்க்காரின் பொறுப்பில் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : சார், திருநெல்வேலி மாவட்டத்திலே சாத்தாங்குளம் பகுதியிலே, கன்னியாகுமரி குலசேகரம் பகுதியிலே தொழில்கள் எதுவும் இல்லாமல் மிகவும் பிற்பட்ட பகுதியாக இருக்கின்றன. அங்கே பேப்பர் தொழிற்சாலை

1968 மார்ச் 27]

துவங்குவதற்கு மூலப்பொருள்கள் கிடைக்கின்றன. அங்கே தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: நெல்லை மாவட்டத்தில் முன்பே இரண்டு காகிதத் தொழிற்சாலைகள் இருந்துவருகின்றன. இப்போது காகிதத் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரை திருப்தி கரமான அளவிலே லாபம் தரக்கூடிய அளவிலே இல்லாமல் நட்டத்திற்கு ஆளாகின்றன. காகித விலையை நிர்ணயிக்கும் பொறுப்பு மத்திய அரசிடம் இருக்கிறது. உற்பத்திச் செலவு அதிகமாகும் காரணத்தாலே இப்போது ஒரு கோடி ரூபாய் முதலீடு செய்திருக்கிற சேஷசாயி ஆலை கூட எதிர்பார்த்த அளவிற்குப் பலன் பெற முடியாத அளவு இருக்கிறது. இரண்டு தொழிசாலைகளிலே ஒன்றுதான் நடைபெறுகிறது. இன்னொன்று அனுமதி கேட்டிருக்கிறார்கள். அதுகூட 35 டன் என்ற அளவிலே இல்லாமல் 10 டன் அளவிலே ஆரம்பிக்கலாமா என்று முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். பாபநாசம் பகுதியிலே அந்த ஆலை நிறுவப்படுகிற நிலையிலே மேலும் காகிதத் தொழிற்சாலை நிறுவுவதற்கு உத்தேசம் இல்லை.

திரு. என். கிட்டப்பா : தஞ்சையிலே வைக்கோலும், மூங்கிலும் அதிகமாகக் கிடைப்பதனாலே, அங்கே பேப்பர் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலேயே அரசுக்குள்ள சங்கடமான சூழ்நிலையைக் கூறியிருக்கிறேன். வைக்கோலையும் மூங்கில்களையும் பல்வேறு வகையில் பயன் படுத்துகின்ற சூழ்நிலையில் காகிதத் தொழிற்சாலை ஆரம்பித்தால் அவைகளை அதற்காகவே எடுத்துக் கொண்டு விட்டால், மாட்டுத் தீவனம், வீடு கட்டுதல் போன்றவற்றிற்கு மிகவும் சங்கடம் ஏற்படும். சேஷசாயி ஆரம்பித்திருப்பது காடுகள் நிறைந்த இடமாக இருந்தாலும், ஒரு ஆண்டிற்கான மூங்கில் போதுமான அளவு கிடைப்பதில்லை.

திரு. கே. சகாதேவக் கண்டர் : வட ஆர்க்காடு மாவட்டத்தில் செங்கம் தாலுக்காவில் எந்த விதமான தொழிற்சாலைகளும் கிடையாது. மலைப்பகுதிகளாகவும் காடுகளாகவும் இருக்கின்றன. ஆகவே, சாத்தனூர் அணைப்பகுதியிலே ஒரு பேப்பர் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதன் பிற்பட்ட தன்மையை நோக்கி, வேறு தொழிற்சாலை அமைப்பதுபற்றி யோசிக்கலாம். அங்கு காகிதத் தொழிற்சாலை ஆரம்பிக்கலாம் என்ற நிலைமை ஏற்படாது. அங்கே உள்ள அடிப்படைக் கோட் பாடுகளை வைத்து ஆராய்ந்து தக்க முடிவு எடுக்க வேண்டும்.

திரு. ந. தருமலிங்கம் : பேப்பர் தொழிற்சாலை ஆரம்பிப் பதற்கு வேண்டிய மூலப்பொருள்கள் என்னென்ன என்று அறிய விரும்புகிறேன்.

[1968 மார்ச் 27

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : சாதாரணமாக மூங்கிலிலிருந்து செய்கிறார்கள். நீத்துக்கோரைகள் அபரிதமாகக் கிடைத்தாலும் அவைகள் வேறு பல்வேறு வகைகளிலே பயன் படுத்தியதுபோக, மீதம் இருப்பதைத்தான் காகிதத் தொழிற் சாலைக்குப் பயன்படுத்தலாம். இப்போது காகிதத் தொழிற்சாலை லாபகரமாக நடக்கக்கூடிய நிலைமை நம்பிக்கையூட்டக்கூடிய வகையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. ஆ. கருப்பையா : தனிப்பட்டவர்கள் சிறிய காகிதத் தொழிற்சாலை ஆரம்பித்தால் எத்தனை சதவிகிதம் சர்க்கார் கடன் தரும் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, யாராவது முன்வந்தால் எவ்வளவு கொடுக்கலாம் என்று விதி முறைகள் இருக்கின்றன. அதற்குட்பட்டு வருவார்களானால் செய்யலாம். ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டு நிறைவேற்ற முடியாமல் இருக்கிறார்கள். இதிலிருந்து அது நம்பிக்கையூட்டக் கூடியதாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : கருப்பஞ் சக்கையிலே இருந்து காகிதம் செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லு கிறார்களே, அதைப்பற்றி அரசு பரிசீலித்ததா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, செய்யலாம் என்றாலும், காகிதத் தொழிற்சாலைக்கு, காகிதம் செய்ய வேண்டிய அளவிற்கு கருப்பஞ்சக்கை கிடைக்குமா என்பது யோசிக்க வேண்டிய ஒன்றாகும்.

திரு. டி. மார்டின் : நெல்லை மாவட்டத்தில் திருச்செந்தூர் தாலுக்காவில் சாத்தான்குளம் சப்-தாலுக்காவில் ஏராளமான உடைமரங்கள் காகிதத்திற்கு வேண்டிய மூலப்பொருள்கள் அதிக மாகக் கிடைக்கிற காரணத்தாலும், இலங்கையிலிருந்து பலர் வரக் கூடிய நிலைமை இருக்கிற காரணத்தாலும் இலங்கையிலிருந்து வருகிறவர்களில் தனிப்பட்டவர்கள் ஒரு காகிதத் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு முன்வந்தால் அதற்கு ஊக்கம் கொடுத்து நிறுவு வதற்கு வழிசெய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலிலே குறிப்பிட்டதுபோல் அங்கே ஒரு தொழிற்சாலை நடைபெற்று வருகிறது. மற்றொரு தொழிற்சாலை நடத்துவதற்கு முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவதுபோல் அங்கே ஒரு தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு யாராவது முன்வந்தால் அதை அரசு பரிசீலனை செய்யலாம்.

திரு. எம். பூபதி : தலைவர் அவர்களே, கார்டுபோர்டுகள் செய்வதற்கு வேண்டிய புல்கள் பவானிசாகரில் இருப்பதாகத் தெரிகிறது. அங்கே கார்டுபோர்டுகள், பேப்பர்கள் செய்யக்கூடிய

1968 மார்ச் 27]

தொழிற்சாலை தனியார்கள் நடத்த முடியாத நிலையில் இருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறதா ? அவர்கள் கடனுக்கு மனு கொடுத்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பவானிசாகரைப் பற்றிய குறிப்பு இல்லை. அதைப்பற்றி கவனத்திற்குக் கொண்டு வருவார்களானால் ஆராய்ந்து சொல்லப்படும்.

பரீட்சை முறை

* 339-அ வினா.—வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) S. S. L. C. முதல் கல்லூரி படிப்புவரை கேள்வித் தாள்களை முன் கூட்டியே கொடுத்துவிட்டு புத்தகங்களையும் பார்த்து பரீட்சை எழுதும் முறையை அமுலில் கொண்டுவர தமிழக அரசு திட்டமிட்டு இருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : இப்போதே ரெவினியூ டெஸ்ட் போன்ற பரீட்சைகளிலும், சட்டக் கல்லூரியில் படிக்கக்கூடிய மாணவர்கள் எழுதக்கூடிய பரீட்சைகளிலும், ஒரு சில பகுதிகளோ அல்லது எல்லாப் பகுதிகளுமோ—இப்படிக் கேள்வித் தாள்களைக் கையில் கொடுத்து, புத்தகங்களையும் வைத்துக் கொண்டு, விடை அளிக்கலாம் என்கிற அளவுக்கு முறைகள் இருந்தும், சிலர் பாஸ் செய்கிறார்கள். பலர் பாஸ் செய்வது கிடையாது. ஆகவே, அதே போன்று, இதில் ஏன் அந்த முறையைக் கொண்டுவரக்கூடாது? கொண்டு வராததற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : எப்படி இருக்கிறது என்பதற்கு முழு விவரக் குறிப்பு இல்லை. சாதாரணமாக, பரீட்சை என்பது—அவர்கள் கற்றுக்கொண்டதை நினைவில் வைத்திருக்கிறார்களா, அதுபற்றி ஆராய்ந்து, மறுபடியும் வெளிப்படுத்துகிற ஆற்றல் பெற்றிருக்கிறார்களா என்பதுதான் இப்போது பரீட்சை நடத்துவதனுடைய முக்கிய நோக்கம். அதுவும்கூட, பாடப் புத்தகத்தில் 80 பக்கங்கள் இருந்தால், அதில் ஆசிரியர் ஒரு அறுபது பக்கங்கள் சொல்லிக் கொடுக்கவும் அதில் 40 பக்கங்களில் சென்ற ஆண்டிலும் அதற்கு முந்திய ஆண்டிலும் கேள்வி கேட்கப்பட்டிருக்குமாதலால், அவை தள்ளப்பட்டு, மீதி இருபது பக்கங்கள், கேள்விகள் கேட்கும் பகுதியாக இருக்கும். அதிலும், வரக்கூடிய கேள்விகள் பதினைந்து பக்கமாகவும், அதுவும், இந்த ஆண்டு 35 மார்க் எடுப்பதற்கு எட்டு பக்கங்களைப் படித்தால் போதும், அதை நினைவுபடுத்திக் கொண்டால் போதும் என்ற நிலையில் பரீட்சை எழுதி மறுபடியும் மறந்துவிடும் நிலை